**3.3 மேலதிக செலவினம்**

2017 ஒக்தோபர் 23 தொடக்கம் 27 வரை கொழும்பில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் வனவியல் ஆணைக்குழுவின் அமர்வொன்றிற்கு விருந்துபசாரம் அளிப்பதற்காக செயற்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 5.55 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைவதுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

**3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 சனவரி 01 இலிருந்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டிற்காக முறையான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்புப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்கள் மீது பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2016 யூன் 10 இன் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு உள்ளகக் கணக்காய்வாளரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.